ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி

விடுநர்
டாக்டர். மா. ஆர்த்தி இ.ஆ.ப.,
மாநிலத் திட்ட இயக்குநர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
சென்னை- 600006.

பெறுநர்
முதன்மைக் கல்வி அலுவலர்கள்,
அனைத்து மாவட்டங்கள்.

ந.க.எண்:204/ ஆ3/ கலை / ஒபக/2023 நாள்:17.10.2023

பொருள்: ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – கலைத்திருவிழா 2023-24 போட்டிகள் – கூடுதல் மாணவர்கள் பாதுகாப்பு வழிகாட்டும் நெறிமுறைகள் மற்றும் செலவினங்கள் மேற்கொள்ளுதல் – தொடர்பாக.

பார்வை: 1. ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, பள்ளிக்கல்வி மற்றும் தொடக்க கல்வி இயக்குநர்களின் கூட்டு செயல்முறைகள் ந.க.எண்:3856/ஆ3/கலை/ஒபக/2023, நாள்:03.10.2023.
2. இவ்வலுவலக கடிதங்கள் ந.க.எண்:3856/ஆ3/கலை/ஒபக/2023, நாள்:10.10.2023. (நிதி விடுவித்தல் சார்ந்து).

*******************

பள்ளிக் கல்வி துறையின் கீழ் அனைத்து அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 12 வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு பள்ளி அளவிலான கலைத்திருவிழா போட்டிகள் 14.10.2023 அன்று நிறைவடைந்துள்ள நிலையில் தற்போது வட்டார அளவிலான போட்டிகளுக்கான ஆயத்த பணிகள் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் தற்போது கலைத்திருவிழா போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவர்களின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு கலைத்திருவிழா நடைப்பெறும் பள்ளிகளில் பின்பற்றப்படவேண்டிய வழிகாட்டு நெறிமுறைகள் பின்வருமாறு வழங்கப்படுகிறது.

(I) மாணவர்கள் பாதுகாப்பு வழிகாட்டும் நெறிமுறைகள்

அ. போட்டிகள் நடைப்பெறும் இடங்கள்தெரிவு செய்தல்

- வட்டாரம், மாவட்டம் மற்றும் மாநில அளவில் நடைபெறும் கலைத்திருவிழா போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவர்கள் பெற்றோரின் ஒப்புதல் கடிதம் பெற்று கலந்து கொள்ளுதல் வேண்டும்.

- போட்டிகள் கலந்து கொள்ளும் மாணவர்கள் அனைவரும் எளிதாக வந்து செல்லக் கூடிய வகையில் போக்குவரத்து வசதி உள்ள இடங்களில் அமைந்த பள்ளிகளில்/ கல்லூரிகளில் நடத்தப்பட வேண்டும்.
- மாணவர்களின் உயிருக்கோ உடமைக்கோ எந்தவித விபத்தும் ஏற்படாத வண்ணம் பழுதடையாமல் நல்ல நிலையில் உள்ள உறுதியான கட்டடங்கள் கொண்ட பள்ளிகளின் வகுப்பறைகள், அரங்குகள், விளையாட்டு மைதானங்களில் போட்டிகள் நடத்தப்பட வேண்டும். நல்ல காற்றோட்ட வசதி இருத்தல் வேண்டும். தனியாக அரங்கு அமைக்கும் நிலையில் பொது பணித் துறை அனுமதி பெறுதல் வேண்டும்.
- போட்டிகள் நடைபெறும் பள்ளிக்கு அருகில் திறந்த/பாழடைந்த கிணறு, குளம், மற்றும் ஆறு போன்ற நீர் நிலைகள் இல்லாத வண்ணம் தெரிவு செய்யவேண்டும். தவிர்க்க இயலாத சூழ்நிலையில் கிணறு இருக்கும் பட்சத்தில் அதனை நன்கு கம்பி வலைக்கொண்டு மூடப்பட்டிருக்க வேண்டும்.
- போட்டி நடைபெறும் பள்ளி வளாகத்திற்குள் அமைந்துள்ள கீழ்நிலை மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், செப்டிங் டாங்க் ஆகியன நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு பாதுகாப்பாக மூடப்பட்டிருக்க வேண்டும்.
- பள்ளிக் கட்டிடத்தின் மேற்கூரைக்குச் (Terrace) செல்லும் வழி எப்போதும் மூடப்பட்டு பூட்டப்பட்டிருக்க வேண்டும்.
- மாடிபடிக்கட்டுகளில் உள்ள கைப்பிடி அமைப்பின் மீது மாணவர்கள் சறுக்கி விளையாடுவதை தவிர்க்க, உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வதுடன் போட்டிகள் நடைபெறும் வகுப்பறைகளுக்கு உள்ளும், வெளியேயும் ஆசிரியர் கண்காணிப்புப் பணியில் இருத்தல் வேண்டும்.

ஆ. <u>தீ மற்றும் மின் விபத்துக்களிலிருந்து பாதுகாப்பு</u>

- தீ அணைப்புக் கருவிகளான தீயணைப்பான் (Fire extinguisher), தண்ணீர் மற்றும் மணல் நிரப்பப்பட்ட வாளிகள் போட்டிகள் நடைபெறும் இடங்களில் எப்போதும் தயார் நிலையில் அவசர உபயோகத்திற்கு உதவும் வகையில் பொருத்தமான இடத்தில் வைக்கப்பட்டிருக்க வேண்டும்.
- தேவையற்ற எளிதில் தீப்பற்றக்கூடிய பொருட்களை போட்டிகள் நடைபெறும் இடங்களில் வைத்தல் கூடாது.

- தகுதியான பணியாளர்களைக் கொண்டு போட்டிகள் நடைப்பெறும் பள்ளிக் கட்டிடத்தின் மின் இணைப்புகளும், கம்பங்களும், மின்கசிவின்றி பாதுகாப்பான நிலையில் இருப்பதை உறுதி செய்தல் வேண்டும். அறுந்த / துண்டித்த நிலையில் மின்சார ஒயர்கள் இருப்பின் அவைகள் உடனடியாக நீக்கம் செய்யப்படவேண்டும்.
- (Non-Insulated) காப்பிடப்படாத மின் கம்பிகளோ, பழுதடைந்த ஸ்விட்ச்கள் (switch) இல்லாதவாறு பழுதுபார்க்கப்பட்டு மின்கசிவின்மையை உறுதி செய்தல் வேண்டும்.
- போட்டிகள் நடைப்பெறும் பள்ளிகளில் முதலுதவி பெட்டி பயன்பாட்டில் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். இதுகுறித்து ஆசிரியர்களுக்கு முறையான பயிற்சி வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.
- தீ மற்றும் மின் விபத்து மட்டுமின்றி நச்சு விலங்குகள் மற்றும் பூச்சிகள் இவற்றிடமிருந்தும் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ள வேண்டும்.

<u>இ. குடிநீர்</u>

- போட்டிகள் நடைபெறும் இடங்களில் மாணவர்களுக்கு பாதுகாப்பான சுத்தமான குடிநீர் வழங்குதல் வேண்டும்.

<u>ஈ. கழிப்பிடங்கள்</u>

தண்ணீர் வசதியுடன் போதிய எண்ணிக்கையில் கழிப்பறை வசதி உள்ள பள்ளிகளை தெரிவு செய்தல் வேண்டும். இக்கழிப்பறைகள் தூய்மையாகவும் கிருமி நாசினி தெளித்து ஆரோக்கியமான முறையில் காலை முதல் மாலை வரை பயன்படுத்தப் படவேண்டும்.

உ. <u>பொதுவான பிற பாதுகாப்பு வசதிகள்</u>

- பார்வை –1ல் காணும் மாநில திட்ட இயக்குநர், பள்ளிக்கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநர் அவர்களின் கூட்டு செயல்முறைகளில் கூறப்பட்டுள்ள வழிமுறைகளை கண்டிப்பாக பின்பற்றி கலைத்திருவிழா போட்டிகள் நடத்தப்பட வேண்டும். எப்போட்டிகளிலும் எக்காரணத்தை கொண்டும் நெருப்பு மற்றும் கூர்மையான பொருட்களை போட்டிகளில் பயன்படுத்திட கூடாது.

- மாணவிகள் போட்டிகளில் கலந்து கொள்ளும் பட்சத்தில் பெண் ஆசிரியர் ஒருவர் கண்டிப்பாக பள்ளிகளில் இருந்து உடன் அழைத்து வருதல் வேண்டும்.
- போட்டிகள் நடைபெறும் இடங்களுக்கு செல்ல பேருந்துகளில் பயணிக்கும் பட்சத்தில், அனைத்து மாணவர்களும் பேருந்தில் ஏறியதை உறுதி செய்த பின்னர் மட்டுமே உடன்வரும் ஆசிரியர்கள் பேருந்தில் ஏறுதல் வேண்டும். பேருந்து நின்ற பின்னர் மட்டுமே மாணவர்களை இறங்க அறிவுறுத்த வேண்டும்.
- அறிமுகம் இல்லாத நபர்களிடம் பேசுவதையோ, அவர்களிடமிருந்து கைபேசி எண் பெறுவதையும் மாணவ/ மாணவிகள் கண்டிப்பாக தவிர்க்க அறிவுறுத்துதல் வேண்டும். இதனை உடன்வரும் ஆசிரியர்கள் கண்காணித்தல் வேண்டும்.
- மாணவர்கள் விலை உயர்ந்த அணிகலங்கள் அணிந்து வருதல் கூடாது.
- வட்டார அளவிலான போட்டிகளுக்கு மட்டும் மாணவர்கள் மதிய உணவு எடுத்து வர செய்தல் வேண்டும்.
- போட்டிகள் நடைபெறும் இடங்களில் பிற அரசு பள்ளிகளில் பணிபுரியும் உடற்கல்வி ஆசிரியர்களை கொண்டு மாணவர்கள் பாதுகாப்பாகவும், அமைதியாகவும் போட்டிகளை கண்டு களிக்கவும் மாணவர்களைக் கண்காணிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும்.
- போட்டிகள் அனைத்தும் பகல் நேரத்தில் மட்டுமே நடத்தப்படுதல் வேண்டும்.

**(II) செலவினங்கள் மேற்கொள்ளுதல் –திருத்தம்:**

13.10.2023 அன்று வட்டார அளவிலான கலைத்திருவிழா போட்டிகள் நடத்துதல் சார்ந்து அனைத்து மாவட்ட உதவி திட்ட அலுவலர்கள் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களுக்கு (Art &Culture & EMIS) நடைபெற்ற ஆன்லைன் கூட்டத்தில், மாவட்டங்களிலிருந்து கோரியதின் அடிப்படையில் பார்வை–2ல் காணும் இவ்வலுவலக கடிதத்தில் மாவட்ட அளவில் மேற்கொள்ளப்பட வேண்டிய செலவினத்தில் பின்வரும் திருத்தம் வழங்கப்படுகிறது.

மாவட்ட அளவிலான போட்டிகள்:

மாவட்ட அளவிலான போட்டிகளுக்கு ஒரு வட்டாரத்திற்கு ரூ.67500/- வட்டார விகிதாசார அடிப்படையில் போட்டிகள் நடத்திட ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிகளில் இருந்து போட்டிகள் நடத்துவதற்கான ஏற்பாடுகள், போட்டியில் பங்கேற்கும் மாணவர்களில் போக்குவரத்து வசதி தேவைப்படும் மாணவர்களுக்கு போக்குவரத்து வசதி வழங்கவும், மாணவர்களுக்கு தேநீர், சிற்றுண்டி, உணவு உள்ளிட்ட இதர செலவினங்கள் மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது. மேலும் நடுவர்கள் மதிப்பூதியம் (ஒரு வகை போட்டிக்கு நடுவர் ஒருவருக்கு) ரூ.500/- வீதம் வழங்கிட தெரிவிக்கப்படுகிறது.

வட்டார கல்வி அலுவலர்கள் போட்டிகள் நடைபெறும் பள்ளிகளை பார்வையிட்டு மேற்கூறப்பட்ட அனைத்து பாதுகாப்பு வசதிகளும் பராமரிக்கப்படுவதினை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

எனவே அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் மேற்காண் வழிமுறைகளை பின்பற்றி அனைத்து நிலைகளிலும் மாணவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்து கலைத்திருவிழா போட்டிகளை சிறப்பாக நடத்திட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

17/10/2023

மாநில திட்ட இயக்குநருக்காக

17/10/23

நகல் அனுப்பப்படுகிறது.

ந.க.எண்: 696/ மா.ஒ.9/ ஒபக/ 2023 நாள்: 17.10.2023

பார்வையில் காணும் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி மாநில திட்ட இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் தகவலின் பொருட்டும், தக்க நடவடிக்கை எடுக்கும் பொருட்டும் அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள், வட்டாரக் கல்வி அலுவலர்கள், வட்டார வள மைய மேற்பார்வையாளர்களுக்கு அனுப்பப்படுகிறது.

மேலும், இணைப்பில் கண்டுள்ளவாறு மாணவர்கள் பாதுகாப்பு வழிமுறைகள் மற்றும் செலவினங்களை வழிகாட்டுதல்களை பின்பற்றி மேற்கொள்ள அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள், வட்டாரக் கல்வி அலுவலர்கள், வட்டார வள மைய மேற்பார்வையாளர்கள்(பொ) கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு: செயல்முறைகள்.

17/10/23

முதன்மைக் கல்வி அலுவலர்,
ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி,
தஞ்சாவூர்.

17/10/23 17.10.23

பெறுநர்

1) மாவட்டக் கல்வி அலுவலர்(இடைநிலை), தஞ்சாவூர், பட்டுக்கோட்டை.
2) மாவட்டக் கல்வி அலுவலர்(தொடக்கநிலை), தஞ்சாவூர், கும்பகோணம்.
3) அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள், தஞ்சாவூர் மாவட்டம்.
4) அனைத்து வட்டார வள மேற்பார்வையாளர்கள்(பொ), தஞ்சாவூர் மாவட்டம்.